சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கடன் பெற்று தவணை செலுத்தத் தவறிய உறுப்பினர்களுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி சலுகை வழங்கப்பட்டது - காலக்கெடு நிர்ணயம் செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

========================= ========== == ================

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீகூச-1) த்துறை**

அரசாணை (நிலை) எண். 31

நாள்: 03 .03.2023,
சுபகிருது வருடம், மாசி- 19,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்க

1. அராசணை (நிலை) எண்.40, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீகூச.1) துறை, நாள் 16.03.2015.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) அவர்களின் கடித ந.க எண்.5686/2014/ஆ.4(ஆ.3), நாள் 27.01.2022.

=========

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கடன் பெற்று, தவணை செலுத்தத் தவறி, சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் கடன்தாரர்கள், தாம் தவணை செலுத்தத் தவறிய அசல் மற்றும் வட்டியினை செலுத்த முன் வருகையில், அவர்கள் செலுத்த வேண்டிய தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் தவணை தவறிய அபராத வட்டியினை முழுமையாக தள்ளுபடி செய்யலாம் என ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள், மேற்காண்

அரசாணையின் அடிப்படையில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தால், மேற்படி திட்டத்தின் கீழ் உறுப்பினர்களிடமிருந்து அசல் மற்றும் தவணை தவறிய வட்டி வசூல் செய்யப்பட்டு, தவணை தவறிய தொகைக்கான EMI வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி அளிக்கப்பட்டு வந்துள்ளது எனவும், கடந்த 6 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 25% உறுப்பினர்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர் என்றும், 12728 உறுப்பினர்களது கடன்கள் தீர்வு செய்யப்பட்டு அசல் ஆவணங்கள் விடுவிக்கப்பட்டு அசல் மற்றும் வட்டி தொகை ரூ.331.31 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீ.வ.) அவர்கள் மேலும் தமது கருத்துருவில் தவணைத் தவறிய தொகைக்கான EMI வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.180.27 கோடி தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது என்றும் இத்தள்ளுபடி திட்டம், வெகு காலமாக அமலில் உள்ளது என்பதால் சங்கங்களுக்கும் இணையத்திற்கும் நட்டம் ஏற்படுகிறது என தெரிவித்து, இத்திட்டத்தினை ரத்து செய்ய கோரும் வீட்டுவசதி இணையத்தின் கோரிக்கை மீது தக்க ஆணை வேண்டி அரசுக்கு பரிந்துரை செய்தார்.

4. மேலே பத்தி 3ல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, பத்தி 3-ல் உள்ள அவரது பரிந்துரையை ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி, இவ்வரசாணை வெளியிடும் நாளிலிருந்து அதாவது 03.03.2023-லிருந்து ஆறு மாதங்களுக்கு மட்டும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட " ஒரு முறை கடன் தீர்வு " திட்டம் அமலில் இருக்கும் என்றும், அதன் பிறகு இத்திட்டம் செயல்படாது எனவும் அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**அபூர்வா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)
ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-7
மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்,
வேப்பேரி, சென்னை-7

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்,
சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி )
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதித் (வீட்டுவசதி) துறை, சென்னை-9
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை-9
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(அநமு.1) த்துறை
சென்னை-9
இருப்பு கோப்பு/உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

2/3/23
**பிரிவு அலுவலர்**
3/3/23